






# ஒருவரோடு ஒருவர் சேர்ந்து வாழ்தல்



“அவனவனுக்கு இன்னின்னபடி
உத்தரவு சொல்லவேண்டுமென்று
நீங்கள் அறியும்படிக்கு, உங்கள்
வசனம் எப்பொழுதும் கிருபை
பொருந்தினதாயும் உப்பால்
சாரமேறினதாயுமிருப்பதாக.”

கொலோசெயர் 4:6

நிருபத்தின் மிகவும் நடைமுறைப் பகுதியில், பல்வேறு செல்வாக்கு வட்டங்களில் உள்ள தனிப்பட்ட உறவுகள் என்ற தலைப்பைப் பற்றி பவுல் குறிப்பிடுகிறார்.

உறவுகள் பதற்றத்தையும் வாக்குவாதங்களையும் ஏற்படுத்துகின்றன. எனவே, மதிப்புகள், குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் பற்றிய பொதுவான உடன்பாடு, நல்லிணக்கம் இருக்க வேண்டும்.



வாழ்க்கை துணைவர்களுக்கும், பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் இடையே, எஜமானர்களுக்கும் அடிமைகளுக்கும் இடையே, திருச்சபை சகோதர சகோதரிகளுக்கு இடையே, விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் இடையேயான உறவுகளை மேம்படுத்துவதற்கு பவுல் பயனுள்ள அறிவுரைகளை நமக்கு வழங்குகிறார்.



- வாழ்க்கைத் துணைவர்களுக்கு இடையிலான உறவுகள் (கொலோ. 3:18-19)
- பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான உறவுகள் (கொலோ. 3:20-21)
- முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான உறவுகள் (கொலோ. 3:22-25; 4:1)
- திருச்சபையில் உள்ள உறவுகள் (கொலோ. 4:2-4)
- அவிசுவாசிகளுடனான உறவுகள் (கொலோ. 4:5-6)

# வாழ்க்கைத் துணைவர்களுக்கு இடையிலான உறவுகள்



"மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்துகொள்ளாதிருங்கள்." (கொலோசெயர் 3:18-19)

ஒரே நேரத்தில் எழுதப்பட்ட கொலோசெயர் மற்றும் எபேசியர் நிருபங்கள் வாழ்க்கைதுணைவர்கள் குறித்து ஒத்த (மற்றும் நிறைவான) ஆலோசனைகளை கொண்டுள்ளன (கொலோ. 3:18-19; எபே. 5:21-33).

**மனைவிகள் தங்கள் கணவர்களுக்கு கீழ்படிய வேண்டும்(கொலோ. 3:18; எபே. 5:22-24)**

- இந்த அற்ப்பணம் பரஸ்பர சமர்ப்பணத்திற்குள் உள்ளது(எபே. 5:21), "கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல."

**கணவர்கள் தங்கள் மனைவிகளை நேசிக்க வேண்டும்(கொலோ. 3:19; எபே. 5:28)**

- கிறிஸ்து நம்மை நேசித்த அதே அன்பால் அவர்களை நேசியுங்கள் (எபே. 5:25)
- அவரவர் நலனுக்கு அவர்களே பொறுப்பு (எபே. 5:29)
- "கடுமையாக" இருக்காதீர்கள் (அவர்களை எரிச்சலடைய செய்யாதீர்கள், கடுமையாகவோ அல்லது வன்முறையாகவோ நடந்து கொள்ளாதீர்கள், கொடுங்கோன்மையாக இருக்காதீர்கள்)









துணைவர் இருவரும் ஒரு குழுவாக செயல்பட வேண்டும், ஒருவருக்கொருவர் கலந்தாலோசித்து, ஒருமனதாக முடிவுகளை எடுக்க வேண்டும், கணவனே குடும்பத்தின் சிறந்த குடும்ப தலைவராக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் எப்போதும் மற்றவரின் நலனையே நாட வேண்டும்.

“ஒவ்வொருவரும் அன்பை எதிர்ப்பார்க்காமல், அன்பை கொடுக்கட்டும். உங்களுக்குள் உயர்ந்ததை வளர்த்துக் கொள்ளுங்கள். ஒருவருக்கொருவர் நல்ல குணங்களை விரைவாக அடையாளம் காணுங்கள். பாராட்டப்படுகிறோம் என்ற உணர்வு ஒரு அற்புதமான தூண்டுதலாகவும் திருப்தியாகவும் இருக்கிறது. அனுதாபமும் மரியாதையும் சிறப்பானதை தேடுவதை ஊக்குவிக்கின்றன. மேலும் அது உயர்ந்த நோக்கங்களைத் தூண்டும் போது அன்பும் அதிகரிக்கிறது. [...]

மனைவி தன் கணவனை மதிக்க வேண்டும். கணவன் தன் மனைவியை நேசிக்க வேண்டும், போற்ற வேண்டும்: அவர்களுடைய திருமண உறுதிமொழி அவர்களை ஒன்றாக இணைப்பது போல, கிறிஸ்துவின் மீதான அவர்களின் நம்பிக்கை அவர்களை அவரில் ஒன்றாக்க வேண்டும். திருமண உறவில் நுழைபவர்கள் இயேசுவைப் பற்றி கற்றுக்கொள்ளவும், அவருடைய ஆவியால் மேலும் மேலும் நிரப்பப்படவும் ஒன்றாக முயற்சிப்பதைக் காண்பதை விட தேவனுக்கு பிரியமானதாக வேறு என்ன இருக்க முடியும்?

எலன் ஜி உவைட் (தி க்றிஸ்டியன் ஹோம், பக். 107, 114)

# பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான உறவுகள்

“பிள்ளைகளே, உங்களைப் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது. பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள். (கொலோசெயர் 3:20-21)



இன்றைய சமூகத்தில், நிறுவப்பட்ட திருமணங்கள் மற்றும் ஒற்றை பெற்றோர் என இரு குடும்பங்களுக்கும் “பெற்றோர்” என்ற வார்த்தை பயன்படுத்தபட வேண்டும். பவுலின் கூற்றுப்படி, ஆரோக்கியமான உறவு என்பது பெற்றோரின் பொறுப்பு மட்டுமல்ல, குழந்தைகளின் பொறுப்பாகும்.



## மகன்கள் மற்றும் மகள்களின் பொறுப்புகள் (கொலோ. 3:20; எபே. 6:1-3)

- பிள்ளைகளின் கீழ்படிதல் அவர்களின் தெரிவு அல்ல
- இந்த கீழ்படிதல் 5ஆம் கற்பனையை அடிப்படையாக கொண்டது
- மேலும், கீழ்படிதல் அதன் சொந்த வெகுமதியுடன் வருகிறது

## பெற்றோரின் பொறுப்புகள் (கொலோ. 3:21; எபே. 6:4)

- பிள்ளைகளை சேர்வடைய செய்யாமல், அவர்களை கோபப்படுத்தாமல், எரிச்சலூட்டாமல் அவர்களுக்கு கல்வி கொடுங்கள்
- பொறுமையிழந்து அல்லது கேவலமாக நடந்து கொண்டு அவர்களை கோபப்படுத்தாதீர்கள்
- கர்த்தருக்கேற்ற வழியிலே அவர்களை கற்பியுங்கள்(உபா. 6:6-7; நீதி. 22:6)

நம் குழந்தைகள் தேவனைப் பற்றியும் நித்திய ஜீவனுக்காக எடுக்கும் முடிவுகளைப் பற்றியும் கற்றுக்கொள்ள காலை மற்றும் மாலை குடும்ப ஜெபம் முக்கியம். மேலும் நமது முன்மாதிரியே குழந்தைகளுக்கு மிக சிறந்த கல்வியாளர் என்பதை மறந்துவிடக் கூடாது.



“பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் உங்களை நேசிக்கிறார்கள் என்பதையும், அவர்களை மகிழ்விக்க உங்களால் முடிந்த அனைத்தையும் செய்வீர்கள் என்பதையும் காணட்டும். நீங்கள் அவ்வாறு செய்தால், உங்களுக்கு தேவையான கட்டுப்பாடுகள் அவர்களின் இளம் மனதில் மிக அதிக எடையை கொண்டிருக்கும். உங்கள் பிள்ளைகளை மென்மையுடனும் இரக்கத்துடனும் ஆட்சி செய்யுங்கள், “அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள்”, என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேவதூதர்கள் உங்கள் பிள்ளைகளுக்கு தேவன் கொடுத்த வேலையை செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், உங்கள் பங்கை செய்வதன் மூலம் அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும்.”

எலன் ஜி உவைட்(தி கறிஸ்டியன் ஹோம், பக். 193)

# முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான உறவுகள்

“வேலைக்காரரே, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்து, நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள்.” (கொலோசெயர் 3:22)



பவுலின் காலத்தில் இருந்த அடிமைத்தனத்தின் உறவு, துரதிஷ்டவசமாக, இன்று இருக்கும் அடிமைத்தனத்தின் வகைகளுடன் சிறிதும் சம்பந்தப்படவில்லை. எனவே இந்த ஆலோசனையை ஒரு முதலாளி மற்றும் வேலையாள் உறவின் சூழலில் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.



## வேலையாட்களின் நடத்தை(கொலோ. 3:22-25; எபே. 6:5-8)

- யாரும் பார்க்காவிட்டாலும் கூட, எப்போதும் உங்களால் சிறந்ததை செய்யுங்கள்
- உங்கள் வேலையை தேவனுக்காக செய்வது போல், அதில் சிறந்து விளங்க பாடுபடுங்கள்
- நியாயமானதாக இருக்கும்போது க்ண்டனத்தை எற்றுகொள்ளுங்கள்
- நல்ல வேலை நிச்சயம் பயனளிக்கும்
- ஒரு மோசமான முதலாளி நம்மை கீழ்படிதலில் இருந்து விலக்குவதில்லை (1பே 2:18)

## முதலாளிகளின் நடத்தை (கொலோ. 4:1; எபே. 6:9)

- உண்மையோடும் நீதியோடும் வழிநடத்த வேண்டும்
- அச்சுறுத்தல்கள் மற்றும் சலன புத்தியோடு கோரிக்கைகளை பயன்படுத்த வேண்டாம்
- ஒவ்வொரு முதலாளிக்கும் முதலாளி இருக்கிறார், அவருக்கு அவர் கணக்கு கொடுக்க வேண்டும்

நாம் அனைவரும், முதலாளிகள் அல்லது வேலைக்காரர்கள், எல்லாருமே கிறிஸ்துவின் ஊழியர்கள் (அடிமைகள்), ஏனென்றால் நாம் அவருக்கு சேவை செய்கிறோம்.

“சமூகத்தின் நிறுவப்பட்ட ஒழுங்கை தன்னிச்சையாகவோ அல்லது திடிரெனவோ கவிழ்ப்பது அப்போஸ்தலரின் வேலை அல்ல. இதை முயற்சிப்பது நற்செய்தியின் வெற்றியை தடுப்பதாகும். ஆனால் அடிமைத்தனத்தின் அடித்தளத்தையே தாக்கும் கொள்கைகளை அவர் கற்பித்தார். மேலும் அவை நடைமுறைக்கு வந்தால், நிச்சயமாக முழு அமைப்பையும் குறைமதிப்பிற்கு உட்ப்படுத்தும். [...]

கிறிஸ்தவம் எஜமானருக்கும் அடிமைக்கும், இராஜாவுக்கும் குடிமகனுக்கும், சுவிஷேச ஊழியருக்கும், கிறிஸ்துவில் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட பாவிக்கும் இடையே ஒரு வலுவான ஐக்கிய பிணைப்பை உருவாக்குகிறது. அவர்கள் ஒரே இரத்தத்தில் கழுவப்பட்டு, ஒரே ஆவியால் உயிர்பிக்கப்பட்டுள்ளனர்: அவர்கள் கிறிஸ்து இயேசுவில் ஒன்றாக்கப்படுகிறார்கள்.

எலன் ஜி உவைட் (அப்போஸ்தலருடைய நடபடிகள், பக். 460)

# திருச்சபையில் உள்ள உறவுகள்

"இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்." (கொலோசெயர் 4:2)





"ஒருவருக்கொருவர் ஜெபிக்க வேண்டும்" என்று வலியுறுத்தப்படுகிறோம் ஏனென்றால் "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." (யாக் 5:16).

காலை மற்றும் மாலை ஜெபங்களுக்கு அப்பால், எல்லா நேரத்திலும் ஜெபிக்க வேண்டும் என்று பவுல் முன்மொழிகிறார் (கொலோ. 4:2; எபே. 6:18; 1 தெச. 5:17).

நெகேமியா, இராஜாவுக்கு முன்பாக மௌனமாக ஜெபித்தது போல (நெகே. 2:4), எந்த இடத்திலும் எல்லா சூழ்நிலையிலும் ஜெபிக்கும் பாக்கியம் நமக்கு உண்டு.

மேலும், பரிசுத்த ஆவியானவர் நமது ஜெபத்தை பயனுள்ளதாக மாற்றுவார் என்ற உறுதி நமக்கு உள்ளது (ரோ. 8:26).

நற்செய்தியை அறிவிப்பவர்களுக்காக ஜெபிக்க பவுல் ஒரு சிறப்பு வேண்டுகோள் விடுக்கிறார்(கொலோ. 4:3-4; எபே. 6:19). பிரசங்கம் செய்பவர்க்கு சுவிஷேச பணியில் சிறிதளவு அல்லது அதிக அனுபவம் இருந்தாலும் பரவாயில்லை; இந்த பணிக்கு யாரும் போதுமானவர்கள் அல்ல. பவுல் தானே ஜெபித்தது மட்டுமல்லாமல், தனது வார்த்தைகள் சரியானதாக இருக்க சகோதரர்களை தனக்காக ஜெபிக்கும்படியும் கேட்டுகொண்டார்.





“சத்தியம் அறிமுகப்படுத்தப்படும் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு முயற்சியிலும், வெவ்வேறு மனங்கள், வெவ்வேறு திட்டங்கள் மற்றும் உழைப்பு முறைகள் ஒன்றிணைக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது. அனைவரும் ஒன்றாக ஆலோசனை வழங்குவதையும், ஒன்றாக ஜெபிப்பதையும் ஒரு குறிகோளாக கொள்ள வேண்டும். கிறிஸ்து சொல்கிறார், “அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.” (மத்தேயு 18:19)”

எலன் ஜி உவைட் (செலக்டட் மெசஸேஜஸ், அதி. 3, பக். 24)

# அவிசுவாசிகளுடனான உறவுகள்

"புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்." (கொலோசெயர் 4:5)



நமக்கு பெரும் நன்மைகள் உண்டு: இயேசு நமக்காக செய்ததைக் கற்றுகொண்டோம்; அதை ஏற்றுக்கொண்டோம்; இரட்சிப்பின் நிச்சயமும் நமக்கு உண்டு.

யாரோ ஒருவர் நமக்கு சொன்னால் அதை நாம் அறிவோம். அதே போல, நாம் அதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். இயேசுவை இன்னும் அறியாத "வெளியாட்களுடன்," நாம் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என்று பவுல் கூறுகிறார் (கொலோ. 4:5-6)?



| | |
|---|---|
| ஞானத்துடன் | இயேசுவை அறியாதவர்களுடனான நமது உறவில், "பரத்திலிருந்து வருகிற ஞானம்" நமக்கு தேவை(யாக்கோபு 3:17) |
| கனிவான வார்த்தைகளுடன் | நம் வார்த்தைகள் எப்போதும் பணிவாக இருக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் நம் பேச்சை மகிழ்ச்சியுடன் கேட்பார்கள். |
| "உப்பால் சாரமேறின வார்த்தைகளுடன்" | உரையாடல் பொருத்தமானதாகவும், அந்த நபருக்கும் அவர்களை சுற்றியுள்ள சூழலுக்கும் ஏற்றதாகவும் இருக்க வேண்டும். |
| ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான முறையில் பதிலளிப்பது | ஒவ்வொரு நபரும் வித்தயாசமாக இருப்பதால், ஒவ்வொரு தருணத்திலும் என்ன பதிலளிக்க வேண்டும் என்பதை பரிசுத்த ஆவியானவர் நமக்கு வழிகாட்டுவார் |

எலன் ஜி உவைட் (இன் ஹவன்லி ப்ளேசஸ், ஜூன் 22)

“உண்மையும் நீதியும் கலந்த மரியாதை வாழ்க்கையை பயனுள்ளதாக மட்டுமல்லாமல் அழகாகவும் மணம்மிக்கதாகவும் ஆக்குகிறது. கனிவான வார்த்தைகள், இனிமையான பார்வைகள், மகிழ்ச்சியான முகம், கிறிஸ்தவரைப் பற்றி ஒரு வசீகரத்தை வீசுகின்றன, இது அவரது செல்வாக்கை கிட்டத்தட்ட தவிர்க்க முடியாததாக ஆக்குகிறது. தன்னை மறப்பதில், அவர் தொடர்ந்து மற்றவர்களுக்கு வழங்கும் ஒளி, அமைதி மற்றும் மகிழ்ச்சியில், அவர் உண்மையான மகிழ்ச்சியை காண்கிறார்.

நாம் சுயத்தை மறப்போமாக, எப்போதும் விழிப்புடன் இருந்து மற்றவர்களை உற்சாகப்படுத்துவோம், மென்மையான கருணை மற்றும் தன்னலமற்ற அன்பின் செயல்களால் அவர்களின் சுமைகளை இலகுவாக்குவோம்.”